## மாதிரி வினாத்தாள்

## தமிழ்மொழி தகுதித் தேர்வு

01. "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" – என்று கூறியவர் யார் ?

A) பாரதிதாசன் B) வாணிதாசன்

C) தொல்காப்பியர் D) பாரதியார்

02. "சாகும்போதும் தமிழ்படித்துச் சாகவேண்டும் – என்றன் சாம்பலும் தமிழ்மணந்து வேகவேண்டும்" – என்று கூறியவர் யார்?

A) க.சச்சிதானந்தன் B) துரை மாணிக்கம்

C) ஈரோடு தமிழன்பன் D) தமிழழகனார்

03. திருவெம்பாவை என்ற நூலை இயற்றியவர் யார்?

A) அப்பர் B) சுந்தரர்

C) மாணிக்கவாசகர் D) திருநாவுக்கரசர்.

04. தமிழ் மொழியில் கிடைக்கப்பெற்ற முதல் இலக்கண நூல் எது?

A) தொல்காப்பியம் B) நன்னூல்

C) நேமிநாதம் D) தொன்னூல் விளக்கம்

05. தமிழகத்தின் முதல் அரசவைக் கவிஞராக விளங்கியவர் யார்?

A) உடுமலை நாராயணகவி B) நாமக்கல் கவிஞர் வெ.இராமலிங்கனார்

C) மு.வரதராசனார் D) இராசகோபாலன்

06. வெண்பா ______ வகைப்படும்.

A) நான்கு B) எட்டு

C) மூன்று D) ஐந்து

07. சார்பெழுத்துக்கள் ______ வகைப்படும்?

A) 8　　B) 5

C) 6　　D) 10

08. தமிழ் எழுத்துக்களில் மயங்கொலிகள் எழுத்துக்கள் எத்தனை உள்ளன ?

A) 6　　B) 8

C) 10　　D) 12

09. தமிழ் மொழியில் கீழ்கண்ட எழுத்துக்களில் எது சுட்டெழுத்து ?

A) இ　　B) எ

C) ஏ　　D) யா

10. அணி என்பதன் பொருள் -------

A) எடுத்தல்　　B) கொடுத்தல்

C) அழகு　　D) தொடுத்தல்

11. தமிழ்நாட்டின் மாநில மரம் எது ?

A) பனை　　B) தேக்கு

C) பாக்கு　　D) மூங்கில்

12. தமிழ் எழுத்துகளில் முதலில் மிகப்பெரும் சீர்திருத்தங்களை செய்தவர்?

A) ஜி.யு.போப்　　B) வீரமாமுனிவர்

C) கால்டுவெல்　　D) ஆறுமுகநாவலர்

13. "ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்"-என்ற கவிதையை இயற்றியவர் யார்?

A) திருமூலர்　　B) பாரதியார்

C) பாரதிதாசன்　　D) திருப்பூர் குமரன்

14. “நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி” – இத்தொடரில் உள்ள எண்ணுப் பெயர்களுக்கான தமிழ் எண்களைக் கண்டுபிடி.

A) ச: உ  B) ரு : உ

C) ச : ரு  D) உ : ச

15. திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் நூலை எழுதிய அறிஞர் _________

A) கால்டுவெல்  B) மாக்ஸ் முல்லர்

C) வில்லியம்ஜோன்ஸ்  D) ஹோக்கர்

16. உவமைக்கவிஞர் என்று அழைக்கப்பட்டவர் யார்?

A) சுரதா  B) பாரதிதாசன்

C) பாரதியார்  D) ராஜமார்த்தாண்டன்

17. பகுத்தறிவு கவிராயர் என்று புகழப்படுபவர் யார்?

A) உடுமலை நாராயணகவி  B) பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்

C) பாரதிதாசன்  D) பாரதியார்

18. சீவக சிந்தாமணியின் வேறு பெயர் __________ ஆகும்.

A) மணநூல்  B) பக்தி நூல்

C) தத்துவநூல்  D) அறநூல்

19. வெற்றிவேற்கை நூலின் வேறு பெயர் _______

A) குறுந்தொகை  B) எட்டுத்தொகை

C) நறுந்தொகை  D) கலித்தொகை

20. பரி என்னும் சொல்லின் பொருள் என்ன?

A) யானை  B) குதிரை

C) புலி  D) சிங்கம்

21. எழுத்துக்களை உச்சரிக்கும் போது வல்லின எழுத்துக்கள் பிறக்கும் இடம் எது?

A) தலை B) கழுத்து

C) மூக்கு D) மார்பு

22. பந்து உருண்டது என்பது எவ்வகை வாக்கியம்?

A) பிறவினை B) செயப்பாட்டு வினை

C) செய்வினை D) தன்வினை

23. ஒருசொல் அல்லது தொடர் இருபொருள் தருமாறு அமைவது _______ ஆகும்.

A) பிரிதுமொழிதல் அணி B) வேற்றுமை அணி

C) இரட்டுற மொழிதல் அணி D) உவமை அணி

24. வெண்பாவின் ஓசை ________ ஆகும்.

A) செப்பலோசை B) அகவலோசை

C) துள்ளலோசை D) தூங்கலோசை

25. எழுத்துகளை உச்சரிக்கும்போது இதழ்களை குவிப்பதனால் பிறக்கும் எழுத்துகள் ____, ____

A) இ, ஈ B) எ, ஏ

C) உ , ஊ D) அ, ஆ

26. முல்லை பெரியாறு அணையை கட்டியவர் யார்?

A) சர் ஆர்தர் காட்டன் B) ஜான் பென்னி குயிக்

C) சர்வில்லியம் ஜோன்ஸ் D) கால்டுவெல்

27. தமிழின்பம் என்ற சாகித்ய அகாடமி விருது பெற்ற நூலை எழுதியவர் ______

A) ரா.பி.சேதுபிள்ளை  B) கல்கி

C) வைரமுத்து  D) சு.வெங்கடேசன்

28. கவியரசு என்னும் சிறப்பு பெயரால் அழைக்கப்படுபவர் யார்?

A) புதுமை பித்தன்  B) கண்ணதாசன்

C) பா.விஜய்  D) நா.முத்துக்குமார்

29. "காக்கை குருவி எங்கள் சாதி" – என்று பாடியவர் யார்?

A) பாரதியார்  B) நாமக்கல் கவிஞர்

C) பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரனார்  D) ஔவையார்

30. "வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்" – என்று கூறியவர் யார்?

A) சுந்தரர்  B) அப்பர்

C) வள்ளலார்  D) திருஞான சம்பந்தர்

31. வாய்மை எனப்படுவது____

A) அன்பாகப் பேசுதல்  B) தீங்குதராத சொற்களைப் பேசுதல்

C) தமிழில் பேசுதல்  D) சுத்தமாகப் பேசுதல்

32. "தமிழுக்கு நிலவென்று பேர். இன்பத்
தமிழ் எங்கள் சமூகத்தின் விளைவுக்கு நீர்."

இப்பாடல் வரிகளில் இடம் பெற்றுள்ள விளைவு என்பதன் பொருள் என்ன?

A) உருவாக்கிய  B) சொர்வு

C) வளர்ச்சி  D) மக்கள் குழு

33. உலகப் பொதுமறை என்று போற்றப்படும் நூல் எது?

A) நாலடியார் B) திருக்குறள்

C) திரிகடுகம் D) சிறுபஞ்சமூலம்

34. "சூடிக் கொடுத்த சுடர்கொடி" – என அழைக்கப்படுபவர் யார்?

A) நாச்சியார் B) காக்கைப்பாடினியார்

C) ஔவையார் D) ஆண்டாள்

35. "யாதும் ஊரே யாவரும் கேளிர்" – என்று உரைத்த சங்க காலப்புலவர் ____

A) கபிலர் B) கணியன் பூங்குன்றனார்

C) பரணர் D) பெருங் கௌசிகனார்

36. காடும் காடு சார்ந்த இடமும் உள்ள திணை ____

A) மருதம் B) நெய்தல்

C) முல்லை D) குறிஞ்சி

37. எழுத்துக்களால் ஆனது ____ எனப்படும்.

A) சீர் B) தளை

C) அசை D) தொடை

38. செய்யுளில் ஓசை குறையாத போதும் இனிய ஓசைக்காக அளபெடுப்பது____ஆகும்

A) செய்யுளிசை அளபெடை B) சொல்லிசை அளபெடை

C) ஒற்றளபெடை D) இன்னிசை அளபெடை

39. <u>பெரியமீசை</u> சிரித்தார் – அடிக்கோடிட்ட தொகையின் வகையைத் தெரிவு செய்க.

A) பண்புத்தொகை B) உம்மைத் தொகை

C) உவமைத்தொகை D) அன்மொழித் தொகை

40. தன் நாட்டைக் கைப்பற்ற வந்த மாற்றரசனுடன் எதிர்த்து போரிடுவது பற்றி குறிப்பிடும் திணை ____

A) நொச்சித்திணை B) தும்பைத் திணை

C) உழிஞைத்திணை D) காஞ்சித் திணை

41. வங்கச்சிங்கம் என்று போற்றப்பட்டவர் யார்?

A) நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் B) காந்தியடிகள்

C) உ.முத்துராமலிங்கத்தேவர் D) காமராசர்

42. கரும்பின் நுனிப்பகுதியை குறிக்கும் சொல் எது?

A) தோகை B) கொழுந்தாடை

C) கொப்பு D) தட்டை

43. வேணுவனம் – எனும் சொல்லின் பொருள் காண்க.

A) புனல் நாடு B) மூங்கில் காடு

C) பச்சைக்காடு D) மலைக்காடு

44. அமெரிக்காவின் மினசோட்டா தமிழ்ச்சங்கம் ____ ஆண்டுதோறும் கொண்டாடி வருகின்றது?

A) தமிழ் கலை விழாவை B) தமிழ் இசை விழாவை

C) வாழையிலை விருந்து விழாவை D) இசைவிழா-வை

45. பழந்தமிழ் இலக்கியங்களைப் பாதுகாக்கப் பயன்படுத்தப்பட்டவை எவை?

A) கல்வெட்டுகள் B) செப்பேடுகள்

C) பனையோலைகள் D) மண்பாண்டங்கள்

46. ஐம்பெருங்காப்பியங்கள் என்பவை____

A) சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, குண்டலகேசி.

B) சிலப்பதிகாரம், உதயண குமாரகாவியம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி.

C) சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, சூளாமணி.

D) சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி, வளையாபதி, நீலகேசி.

47. "மோப்பக் குழையும் அனிச்சம்" – எனத் தொடங்கும் திருக்குறளை நிறைவு செய்யும் தொடர் ____

A) முகனமர்ந்து நல்விருந்து ஓம்புவான் இல்

B) விருந்தின் துணைத்துணை வேள்விப் பயன்

C) முகம்திரிந்து நோக்கக் குழையும் விருந்து

D) விருந்தோம்பி வேளாண்மை செய்தல் பொருட்டு

48. "மலைபடு கடாம்" பாட்டுத்தலைவன் ____

A) நன்னன் B) பாரி

C) காரி D) ஓரி

49. பொருத்துக

1. உறைக்கிணறு - (i) கடலருகே தோண்டிகட்டிய கிணறு

2. ஆழிக்கிணறு - (ii) சரளை நிலத்தில் தோண்டி கல், செங்கற்களால் கட்டிய கிணறு

3. கட்டுக்கிணறு - (iii) கமலை நீர் பாய்சும் அமைப்புள்ள கிணறு

4. பூட்டைக்கிணறு – (iv) மணற்பாங்கான இடத்தில் தோண்டி சுடும்மண் வளையமிட்ட கிணறு

A) iv, i, ii, iii B) iii, iv, ii, i

C) i, iv, i, iii D) iv, iii, ii, i

50. “கைத்தலம் பற்றக் கனாக் கண்டேன் தோழி நான்” – இதில் கனவு கண்டவர் ______ கைத்தலம் பற்றியவர் ________

A) ஆதிரை, கண்ணன் B) ஆண்டாள், கண்ணன்

C) அகிலா, கண்ணன் D) ஆண்டாள், கந்தன்

51. மெய்யும், ஆய்தமும் யாப்பில் _______ எனக் குறிக்கப்படும்.

A) சுட்டெழுத்து B) வினா எழுத்து

C) ஒற்றெழுத்து D) மூவெழுத்து

52. மகளே வா! என்பது _______ தொடர்

A) எழுவாய் B) விளி

C) வினைமுற்று D) வேற்றுமை

53. “சுவர் இருந்தால்தான் சித்திரம் வரைய முடியும்” இத்தொடரில் அமைந்துள்ள அணி _______

A) வேற்றுமை அணி B) இரட்டுற மொழிதல் அணி

C) உவமை அணி D) பிறிது மொழிதல் அணி

54. இலக்கண முறைப்படி பேசுவதும், எழுதுவதும் ______

A) வழுவமைதி B) வழாநிலை

C) வழுநிலை D) பெயர்ச்சொல்

55. குறில் எழுத்தை ஒலிக்க ஆகும் கால அளவு ________ மாத்திரை ஆகும்.

A) 1/2 B) 1

C) 2 D) 3

56. மயில் வடிவுள்ள கூட்டுக்குள் ஒருவர் தன் உருவத்தை மறைத்துக் கொண்டு நையாண்டி மேளத்தற்கேற்ப ஆடும் ஆட்டம்?

A) கரகாட்டம் B) தேவராட்டம்

C) ஒயிலாட்டம் D) மயிலாட்டம்

57. சேரர்களின் கொடி _______ ஆகும்.

A) புலிக்கொடி B) மீன்கொடி

C) விற்கொடி D) குதிரைக்கொடி

58. வீணை என்னும் இசைக்கருவியில் எத்தனை நரம்புகள் உள்ளது?

A) 7 B) 5

C) 14 D) 19

59. தமிழில் இரண்டிரண்டு அடிகள் கொண்ட எதுகையால் தொடுக்கப்படும் செய்யுள் _________ வகையாகும்.

A) சதகம் B) சானட்

C) கண்ணி D) பதகம்

60. ஜெயகாந்தனின் குடியரசுத் தலைவர் விருது பெற்ற திரைப்படம் ________

A) உன்னைப் போல் ஒருவன் B) ஊருக்கு நூறு பேர்

C) ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள் D) சில நேரங்களில் சில மனிதர்கள்

61. திருக்குறள் ______ வெண்பாக்களால் ஆன நூல்

A) சிந்தியல் B) குறள்

C) நேரிசை D) மாலை

62. இலக்கணத்திற்கு உட்பட்டு எழுதப்படும் கவிதை?

A) புதுக்கவிதை B) மரபுக்கவிதை

C) மனகவிதை D) ஹைக்கூகவிதை

63. போர் முனையில் ஆயிரம் யானைகளைக் கொன்று வெற்றி கொண்ட வீரனைப் புகழ்ந்து பாடும் இலக்கியம் ______

A) உலா B) பரணி

C) கலம்பகம் D) பதிகம்

64. "சுட்ட பழங்கள்" – என்று குறிப்பிடப்படுபவை _________

A) மண் ஒட்டிய பழங்கள் B) சூடான பழங்கள்

C) வேகவைத்த பழங்கள் D) சுடப்பட்ட பழங்கள்

65. கூடு கட்டத் தெரியாத பறவை எது?

A) காக்கை B) குயில்

C) சிட்டுக்குருவி D) தூக்கணாங்குருவி

66. ஆயுத எழுத்தின் வேறுபெயர் ______ ஆகும்.

A) தனி நிலை B) மேல் நிலை

C) இடை நிலை D) கடை நிலை

67. ஆயுதகுறுக்கம் இடம்பெறும் சொல் ______

A) அஃது B) எஃகு

C) கஃறீது D) எஃது

68. பலபொருள் தரும் ஒரு சொல் என்பது ______

A) இயற்சொல் B) திசைசொல்

C) வடசொல் D) திரிசொல்

69. ஆங்கில சொற்களுக்கு நிகரான பொருந்தா தமிழ் சொற்களை கண்டறிக.

A) Anti clock wise – வலஞ்சுழி B) Internet - இணையம்

C) Search engine – தேடுபொறி D) Whats App - புலனம்

70. பண்டம் + மாற்று என்பதனைச் சேர்த்து எழுதக்கிடைக்கும் சொல்.

A) பண்டமாற்று B) பண்டம்மாற்று

C) பண்மாற்று D) பண்டுமாற்று

71. தமிழின் கிளை மொழிகளில் ஒன்று______

A) உருது B) இந்தி

C) தெலுங்கு D) சமஸ்கிருதம்

72. அறுவடைத் திருநாள் ஆந்திர மாநிலத்தில் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

A) மகர சங்கராந்தி B) லோரி

C) உத்தராயன் D) தார்

73. ரோமானிய மட்பாண்டங்கள் கிடைத்த இடம்

A) ஆதிச்சநல்லூர் B) அரிக்க மேடு

C) மகாபலிபுரம் D) பல்லாவரம்

74. சத்திய தருமசாலை எங்கு நிறுவப்பட்டது ?

A) கடலூர் B) திருப்பூர்

C) காரைக்கால் D) வடலூர்

75. வ. உ. சிதம்பரனார் இழுத்த செக்கு எங்கு உள்ளது.

A) புழல் மத்திய சிறை B) பாளையங்கோட்டை மத்தியசிறை

C) கோவை மத்தியசிறை D) சேலம் மத்தியசிறை

76. நெல்கதிர்களில் எஞ்சியிருக்கும் நெல்மணிகளைப் பிரிப்பதற்காக மாடுகளைக் கொண்டு மிதிக்கச் செய்யும் செயலின் பெயர்?

A) போரடித்தல் B) மாரடித்தல்

C) உதிர்தல் D) கழலுதல்

77. பன்னிரு ஆழ்வார்கள் பாடிய பாடல்களின் தொகுப்பு எவ்வாறு அழைக்கப்படுகிறது?

A) திருமுறைகள் B) பெரியபுராணம்

C) சிற்றிலக்கியம் D) நாலாயிரத் திவ்ய பிரபந்தம்

78. தவறான சொல்லை கண்டறிக.

A) கண்டான் B) வென்ரான்

C) நண்டு D) வண்டு

79. "மாமழை போற்றுதும் மாமழை போற்றுதும்" – எனும் பாடல் வரிகள் இடம் பெற்ற நூல் எது?

A) மணிமேகலை B) குறுந்தொகை

C) சிலப்பதிகாரம் D) வளையாபதி

80. தாவரத்தின் இலை வகைகளை குறிக்கும் சொற்களை பொருத்துக.

1. இலை - (i) பணை
2. தாள் - (ii) கரும்பு
3. தோகை - (iii) நெல்
4. ஓலை - (iv) வேம்பு

A) iv, iii, ii, i B) ii, i, iv, iii

C) iii, i, iv, ii D) i, i, iii, iv

81. “ஊராண்மை” என்னும் சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது______

A) ஊர் + ஆண்மை
B) ஊராண் + மை
C) ஊ + ஆண்மை
D) ஊரு + ஆண்மை

82. உதித்த என்ற சொல்லிற்குரிய எதிர்ச்சொல்______

A) மறைந்த
B) நிறைந்த
C) குறைந்த
D) தோன்றிய

83. விடுபட்ட எழுத்துக்களை நிரப்புக.

அ___கு பறவையிடம் இருப்பது.

A) ல
B) ள
C) ழ
D) ளு

84. தமிழ் இலக்கணத்தில் வினா வகைகளைக் கூறும் இலக்கண நூல் ------------------

A) புறநானூறு
B) அகநானூறு
C) நன்னூல்
D) குறுந்தொகை

85. ஒரு நாளின் ஆறு கூறுகளை சிறுபொழுது என்று பிரிக்கப்பட்டுள்ளது. அதில் வைகறை என்ற பொழுது ---------- மணி முதல் ------------- மணி வரையாகும் ?

A) மாலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை
B) இரவு 10 மணி முதல் இரவு 2 மணி வரை
C) காலை 6 மணி முதல் 10 மணி வரை
**D)** **இரவு 2 மணி முதல் காலை 6 மணி வரை**

86. தாமிரபரணி கடலோடு கலக்கும் இடத்தில் எந்த துறைமுகம் இருந்தது?

A) பொதிகை
B) கொற்கை
C) கொல்லி
D) விந்திய

87. தமிழ்நாடு அரசு ஆண்டுதோறும் யாருடைய பிறந்த நாளை கல்வி வளர்ச்சி நாளாக கொண்டாடப்பட்டு வருகிறது ?

A) பெரியார் B) அண்ணா

C) காமராசர் D) காந்தியடிகள்

88. பொருத்துக.

1. தூத்துக்குடி - (i) குட்டி ஜப்பான்
2. சிவகாசி - (ii) தீப நகரம்
3. மதுரை - (iii) முத்துநகரம்
4. திருவண்ணாமலை - (iv) தூங்கா நகரம்

A) ii, iii, i, iv B) iii, i, iv, ii

C) iii, i, ii, iv D) iv, iii, i, ii

89. மையோ? மரகதமோ? மதிகடலோ? மழைமுகிலோ? என வருணிக்கப்பட்டவர் __________

A) குகன் B) இராமன்

C) சீதை D) இலக்குமணன்

90. தமிழ் மொழியின் உபநிடதம் என்றழைக்கப்படும் பாடல்கள் ?

A) கம்பர் பாடல்கள் B) பாரதியார் பாடல்கள்

C) தாயுமானவர் பாடல்கள் D) பாரதிதாசன் பாடல்கள்

91. சொல்லேருழவனுக்குக் கவரி வீசிய வில்லேருழவன் யார்?

A) அதியமான் B) இராச ராச சோழன்

C) தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை D) தொண்டைமான்

92. கீழ்காணும் நூல்களுள் ஐஞ்சிறுங்காப்பியம் எது?

A) யசோதர காவியம் B) சிலப்பதிகாரம்

C) வளையாபதி D) குண்டலகேசி

93. உவமைத் தொடருக்குரிய பொருளை அறிந்து பொருத்துக

| | | | |
|---|---|---|---|
| 1. உள்ளங்கை நெல்லிக்கனி போல் | - | (i) | தடையின்றி மிகுதியாக. |
| 2. பசுமரத்தாணி போல் | - | (ii) | வெளிப்படைத் தன்மை. |
| 3. மடைதிறந்த வெள்ளம் போல் | - | (iii) | பயனற்ற செயல். |
| 4. விழலுக்கு இறைத்த நீர் போல் | - | (iv) | எளிதில் மனதில் பதிதல். |

A) (i),(iii), (ii), (iv). B) (iii),(i), (iv), (ii).

C) (iv),(ii), (iii), (i). D) (ii),(iv), (i), (iii).

94. நேர், நேர் - வாய்பாடு தருக.

A) புளிமா B) கருவிளம்

C) தேமா D) கூவிளம்

95. தேவராட்டத்தில் பயன்படுத்தப்படும் இசைக்கருவி --------------- ஆகும்?

A) நையாண்டி மேளம் B) உறுமி

C) தப்பு D) டோலாக்

96. பல்லவர் காலச் சிற்பக்கலைக்குச் சிறந்த சான்று_______

A) திருமயம் B) தாராசுரம்

C) பிள்ளையார்பட்டி D) மாமல்லபுரம்

97. உலக தமிழ் செம்மொழி மாநாடு நடைபெற்ற இடம் எது?

A) கோயம்புத்தூர் B) மதுரை

C) சென்னை D) திருச்சி

98. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| 1. | ஆந்தை | - | (i) அகவும் |
| 2. | குயில் | - | (ii) அலறும் |
| 3. | மயில் | - | (iii) குனுகும் |
| 4. | புறா | - | (iv) கூவும் |

A) (ii),(iv), (i), (iii).
B) (i),( iii), (iv), (ii).
C) (iii),(iv), (i), (ii).
D) (ii),(iii), (iv), (i).

99. கீழடி எந்த மாவட்டத்தில் உள்ளது?

A) மதுரை
B) சிவகங்கை
C) இராமநாதபுரம்
D) திருச்சி

100. திருவள்ளுவரின் சிறப்பு பெயர்கள்?

A) தெய்வப்புலவர்
B) பொய்யில் புலவர்
C) வான்புகழ் வள்ளுவர்
D) அனைத்தும் சரி

**விடைகள்**

**தமிழ் மொழித் தகுதித் தேர்வு**

| வி.எண். | விடை | வி.எண். | விடை | வி.எண். | விடை | வி.எண். | விடை |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | D | 26 | B | 51 | C | 76 | A |
| 2 | A | 27 | A | 52 | B | 77 | D |
| 3 | C | 28 | B | 53 | D | 78 | B |
| 4 | A | 29 | A | 54 | B | 79 | C |
| 5 | B | 30 | C | 55 | B | 80 | A |
| 6 | D | 31 | B | 56 | D | 81 | A |
| 7 | D | 32 | C | 57 | C | 82 | A |
| 8 | B | 33 | B | 58 | A | 83 | A |
| 9 | A | 34 | D | 59 | C | 84 | C |
| 10 | C | 35 | B | 60 | A | 85 | D |
| 11 | A | 36 | C | 61 | B | 86 | B |
| 12 | B | 37 | A | 62 | B | 87 | C |
| 13 | A | 38 | D | 63 | B | 88 | B |
| 14 | A | 39 | D | 64 | A | 89 | B |
| 15 | A | 40 | A | 65 | B | 90 | C |
| 16 | A | 41 | A | 66 | A | 91 | C |
| 17 | A | 42 | B | 67 | C | 92 | A |
| 18 | A | 43 | B | 68 | D | 93 | D |
| 19 | C | 44 | C | 69 | A | 94 | C |
| 20 | B | 45 | C | 70 | A | 95 | B |
| 21 | D | 46 | A | 71 | C | 96 | D |
| 22 | D | 47 | C | 72 | A | 97 | A |
| 23 | C | 48 | A | 73 | B | 98 | A |
| 24 | A | 49 | A | 74 | D | 99 | B |
| 25 | C | 50 | B | 75 | C | 100 | D |